# 1. தமிழ்  அமுது

## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

கேள்வி 1.

நித்திலம் இச்சொல்லின் பொருள்

அ) பவளம்

ஆ) முத்து

இ) தங்கம்

ஈ) வைரம்

விடை:

ஆ) முத்து

கேள்வி 2.

செந்தமிழ் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) செம்மை + தமிழ்

ஆ) செந் + தமிழ்

இ) செ + தமிழ்

ஈ) செம் + தமிழ்

விடை:

அ) செம்மை + தமிழ்

கேள்வி 3.

உன்னை + தவிர என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்)

அ) உன்னைத் தவிர

ஆ) உனைத்தவிர

இ) உன்னை தவிர

ஈ) உனை தவிர

விடை:

அ) உன்னைத் தவிர

## ஆடிப் பாடி மகிழ்வோம்

பாடலின் பொருள் :

அத்திப் பழத்தின் தேன் எடுப்போம். ஆலமர விழுது போல் தாங்கு வோம். இன்முகத்துடன் பள்ளிக்குச் செல்வோம். நட்புணர்வுடன் பிறருக்குக் கொடுத்து மகிழ்வோம். மகிழ்ச்சியுடன் பாடம் படித்திடுவோம். ஊர் முழுவதும் சுற்றி வருவோம். எல்லோரும் ஒன்று சேர்ந்து வாழ்வோம். ஏட்டில் பாட்டு எழுதுவோம். ஐந்து வகை நிலம் செழிக்க ஒன்றுபட்டு வாழ்வோம். ஆற்றில் படகு விடுவோம். ஔவையின் அறிவுரைகளை மதித்திடுவோம். எ.:.கு போன்ற மனவலிமை கொண்டு வாழ்வோம்.

விடை:

| | | |
|---|---|---|
| விழுது | – | ஆலமரத்தின் தாங்கும் வேர்; |
| இசைவோடு | – | மனநிறைவோடு; |
| ஈகை | – | பிறருக்கு அளிப்பது; |
| உவகை | – | மகிழ்ச்சி; |
| ஏடு | – | எழுதப் பயன்படும் காகிதம்; |
| ஐவகை | – | ஐந்து விதமான; |
| ஓடம் | – | படகு; |
| ஔவை | – | சங்ககாலப் பெண்புலவர்; |
| எ.:.கு | – | இரும்பின் ஒரு வகை; |
| உறுதி | – | திடம் / வலிமை. |